Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 07.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

தேதி : 07.04.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதே மத்திய அரசின் நோக்கம் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் சுதந்திரமான மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையை நிறுவ மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சுதந்திரமான மற்றும் அமைதியான தேர்தல் சூழலை உறுதி செய்ய, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி சிறப்புக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

*உலக சுகாதார தினம் - 1 (19 )*

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதாரத்திற்காக அனைவரும் அறிவியலோடு ஒருங்கிணைந்து நிற்போம் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு...

(வாய்ஸ்)

*உலக சுகாதார தினம் - 2 (14 )*

(வாய்ஸ்)

உலக சுகாதார தினத்தை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், மகிழ்ச்சியான, ஆக்கப்பூர்வமான, மற்றும் வளமான சமூகத்திற்கு நல்ல ஆரோக்கியமே அடித்தளம் என்று கூறியுள்ளார். நோய் வருமுன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சீரான வாழ்க்கை முறையுடன் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டமைக்க உறுதியேற்க அவர் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், வளமான பூமியை உருவாக்கும் பணியில், அயராது சேவையாற்றி வரும் சுகாதாரப் பணியில் ஈடுபடும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்

கொண்டார். ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உலக சுகாதார தினத்தை முன்னிட்டு அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா நன்றி தெரிவித்துள்ளார்.

*உலக சுகாதார தினம் -3 (09 )*

அவர்களின் அர்ப்பணிப்பு நாட்டின் சுகாதார அமைப்பை வலுவாக வைத்திருக்கிறது என்றும், இந்த நாள் நாட்டு மக்கள் தங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பேணவும், சமச்சீரான வாழ்க்கை முறையைப் பின்பற்றவும் நினைவூட்டுகிறது என்றும் அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் ஆயுஷ்மான் பாரத் மற்றும் பி.எம் பாரதிய ஜன் அவுஷதி பரியோஜனா போன்ற முன் முயற்சிகள் சுகாதார அமைப்பை வலுப்படுத்தியுள்ளன என்றும், தரமான சிகிச்சையை நாட்டு மக்கள் அனைவரும் எளிதாக பெறக்கூடியதாகவும், மாற்றியுள்ளது என்றும், அவர் கூறினார்.

*அன்னபூர்ணா தேவி (13 )*

நாட்டில் பெண்கள் தலைமையிலான நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான அரசின் தொலைநோக்குப் பார்வையை எடுத்துரைக்கும் வகையில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி எழுதிய கட்டுரையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தமது சமூக ஊடகப்பதிவில் பகிர்ந்துள்ளார். பிரதிநிதித்துவம் உண்மையான செல்வாக்காக மாற வேண்டும் என்று கூறிய பிரதமர், மத்திய அரசு எப்போதும் மகளிர் சக்திக்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பதை எடுத்துரைத்தார். நாரி சக்தி வந்தன் அதினியம் அடித்தளம் அமைத்ததன் மூலம், வளர்ந்த இந்தியாவின் முக்கியத் தூணான பெண்கள் தலைமையிலான நிர்வாகத்தை நோக்கி நாடு நகர்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

*ஜெய்சங்கர் (11 )*

மத்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று புதுடெல்லியில் இந்தியா மற்றும் ஆப்ரிக்கா உறவுகள் குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். வர்த்தகம் மற்றும் முதலீடு, கடன் வசதிகள் மற்றும் மானியங்கள், குறிப்பாக கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் திறன்களை வளர்த்தல், பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளுடனான

இந்தியாவின், அணுகுமுறைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆப்பிரிக்கா உடனான இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவுகளையும், வலுவான மக்கள் தொடர்பையும், இந்த கூட்டம் எடுத்துக்காட்டியுள்ளதாக அவர் தமது ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*சிவராஜ் சிங் 1 (18 )*

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதும் அரசின் முதன்மையான முன்னுரிமைகள் என்று மத்திய வேளாண் மற்றும் விவாசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார். ஜெய்பூரில் இன்று நடைபெற்ற பிராந்திய வேளாண் மாநாட்டில் உரையாற்றிய அவர், வேளாண்துறையை வலுப்படுத்த உறுதியான மற்றும் பல்நோக்கு பரிமாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். விவசாயிகளுக்கு அதிகாரமளிக்கவும், அவர்கள் தன்னிறைவு அடையவும், வேளாண்மையை பன்முகப்படுத்துதல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது, நவீன விவசாய முறைகளை ஊக்குவிப்பது, ஒருங்கிணைந்த விவசாய முறைகளில் கவனம் செலுத்துவது ஆகியவை காலத்தின் தேவை என்றும் அவர் கூறினார். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அதே வேளையில் விவசாயத்தை மேம்படுத்துவதும் முக்கியம்

என்று கூறிய அவர் இயற்கை விவசாயத்தைப் பின்பற்றுவதற்கும் உரங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். மேலும் உழவர் அடையாள அட்டைகளை இயக்க முறையில் உருவாக்குமாறு மாநிலங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

*சிவராஜ் சிங் 2 (08 )*

இந்நிகழ்ச்சியில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன் லால் ஷர்மா, பாரம்பரிய விவசாயத்திற்குப் பதிலாக தொழில்நுட்ப அடிப்படையிலான நவீன விவசாய நடைமுறைகளை பின்பற்றுமாறு அவர் விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்தார். ஒருநாள் நடைபெற்ற இந்த வேளாண் மாநாட்டில் வேளாண் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் ராஜஸ்தான், குஜராத் மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த முற்போக்கு விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

*சி.பி. ராதாகிருஷ்ணன் (14)*

தேசத்தின் வலிமை மக்களின் அறிவுசார் திறனில் உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லி இந்திரா காந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகத்தின்

39ஆவது பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் பேசிய அவர், தேசத்தின் திறன் சார் சுற்றுச்சூழலை வலுப்படுத்துவதில் இந்த பல்கலைக்கழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார். தொழில் கல்வி, சான்றிதழ் படிப்பு, திறன் பயிற்சிகளை பிராந்திய மையங்கள் மூலம் இந்த பல்கலைக்கழகம் வழங்கி வருவதாக கூறிய அவர், இத்தகைய முயற்சிகள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான முயற்சிகளை எடுத்துச் செல்ல வழி கோலும் என்றும் கூறினார். இந்த பல்கலைக்கழகத்தில் 3 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதில் 58 சதவிகிதம் பேர் மகளிர் என்றும், குறிப்பாக இவர்கள் ஊரகம் மற்றும் விளிம்பு நிலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் எடுத்துரைத்தார்.

*மகாராஷ்டிரா-1 (17)*

புதிய மற்றும் சுதந்திரமான மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையை நிறுவ மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மும்பையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவீஸ், இந்த முடிவின்படி தகவல் தொழில்நுட்ப இயக்குநரகம், மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையரகமாக மாற்றப்படும் என்று கூறினார். இந்த

நடவடிக்கை தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் ஆளுகையை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. மகாராஷ்டிரா தொலை உணர்வு பயன்பாட்டு மையத்தை ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி சாலை தகவல் அமைப்புகள், நகரத் திட்டமிடல், ஜலாயுக்த ஷிவா திட்டம் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சியை விரைவு படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மகாராஷ்டிரா மீள் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்கீழ் தனியார் மூலதனத்தின் ஆதரவுடன் பேரிடர் மேலாண்மைக்கான நிதி திரட்டப்படும்.

*மகாராஷ்டிரா - 2 (07 )*

கோலாப்பூர், சாங்வீ மற்றும் இச்சல்கரஞ்சி போன்ற நகரங்களில் வடிகால் வசதிகளுடன் கிருஷ்ணா நதி படுகையில் வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. புவிசார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மகாராஷ்டிரா புவி தொழில்நுட்ப பயன்பாட்டு மைய நிறுவனத்தை நிறுவுவதற்கும் மகாராஷ்டிர மாநில மின்சார விநியோக நிறுவனத்தின் நிதி மறு சீரமைப்பையும் மேற்கொள்வதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

*காரைக்கால் தேர்தல் -1 (17)*

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி காரைக்கால் மாவட்டத்தில் வரும் 9ஆம் தேதி அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, அம்மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி சிறப்புக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*காரைக்கால் தேர்தல் - 2 (15)*

(வாய்ஸ்)

சுதந்திரமான மற்றும் அமைதியான தேர்தல் சூழலை உறுதி செய்ய, பாரதிய ந்யாய சன்ஹிதா பிரிவு 163-ன் கீழ், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி சிறப்புக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். இதன்படி இன்று மாலை 6 மணி முதல் வரும் 10ஆம் தேதி காலை 6 மணி வரையிலான காலகட்டத்தில், அனைத்து தொகுதிகளிலும் வாக்காளர் அல்லாத அரசியல் கட்சியினர் மற்றும் பிரச்சார பொறுப்பாளர்கள் காரைக்காலை விட்டு வெளியேற வேண்டும் என்பதுடன், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் மற்றும் ஒலிபெருக்கி பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அம்மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார். மேலும் வாக்குச் சாவடியின் 100 மீட்டர் சுற்றளவுக்கு அங்கீகரிக்கப்படாத நபர்கள் நுழையவும், செல்போன் மற்றும்

ஆயுதங்களைக் கொண்டு செல்லவும் அனுமதி இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்புகளை ஊடகங்களில் வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளது என்று இந்த உத்தரவை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*கலாச்சார அமைச்சகம் (16)*

வந்தே மாதரம் FRAMES தேசிய திரைப்பட போட்டிக்காக, நாடு முழுவதிலும் இருந்து திரைப்பட தயாரிப்பாளர்களுக்கும், படைப்பாற்றல் ஆர்வலர்களுக்கும், கலாச்சார அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது. தங்களின் தனித்துவமான கதைகள் மூலம் வந்தே மாதரத்தின் உணர்வைக் கொண்டாடும் வகையில் இப்போட்டியானது பங்கேற்பாளர்கள் தங்கள் படைப்பாற்றல், புதுமை மற்றும் திறன்களை வெளிப்படுத்தவும், தேசத்தின் மீதான பெருமிதத்தை வெளிப்படுத்தவும், இது ஒரு சிறந்த தளமாக விளங்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. கலை வெளிப்பாட்டை ஊக்குவிப்பதும், தேசபக்தியுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்துவதும் இந்த முன்னெடுப்பின் நோக்கம் என்றும், இப்போட்டியில் தனி நபர்களும், குழுக்களும் பங்கேற்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பங்கேற்பாளர்கள் தங்களின் திரைப்பட பதிவுகளை http://vandemataram.150.in என்ற பிரத்யேக தளம் மூலம் சமர்ப்பிக்கலாம்

என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகள் தேசிய அளவில் அங்கீகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அர்ச்சனா பட்நாயக் (10)*

தமிழகத்தில் வரும் 13ஆம் தேதிக்குள் தேர்தல் பணிக்காக துணை ராணுவப்படையினர் வரவுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். சி.விஜில் செயலி மூலம் 2,600 புகார்கள் பெறப்பட்டு அவற்றில் 2,364 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், மாநிலத்தில் 5,938 வாக்குச்சாவடிகள் பதற்றம் மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார். தேர்தலை நடத்த 1,302 கோடி ரூபாய் ஆணையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், 85 வயதுக்கு மேற்பட்ட இரண்டரை லட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கிற்காக பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*புதுச்சேரி உதயநிதி (04)*

புதுச்சேரியில் வரும் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறுவதை ஒட்டி திமுக வேட்பாளர்களை ஆதரித்து, தமிழக துணை முதலமைச்சர்

திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று மரப்பாலம் சந்திப்பில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதே மத்திய அரசின் நோக்கம் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் சுதந்திரமான மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையை நிறுவ மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சுதந்திரமான மற்றும் அமைதியான தேர்தல் சூழலை உறுதி செய்ய, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி சிறப்புக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது AV/MS/VM

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 07.04.2026 / Script

*கிரிக்கெட் (03)*

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில் குவஹாத்தியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியும், மும்பை இண்டியன்ஸ் அணியும் களம் காண்கின்றன.